முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க ஆஸ்திரேலியா சிங்கப்பூர் நாட்டிற்கு அரசு முறை பயணம் மேற்கொண்ட வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் நேற்று சிங்கப்பூர் வந்து சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் கீழ் உள்ள தொழில் முனைவோர் மையம் வளாகத்தில் அமைந்துள்ள சிங்கப்பூரின் செயற்கை நுண்ணறிவு மையத்தினை பார்வையிட்டு அதன் அதிகாரிகளான டாக்டர் டேரியஸ் மற்றும் டாக்டர் வில்லியம் ஆகியோருடன் வேளாண்மை சார்ந்த தொழில்நுட்பங்களையும் இதர தகவல்களையும் தமிழ்நாடு விவசாயிகளுக்கு விரைந்து எடுத்துச் செல்லும் செயற்கை நுண்ணறிவு காரணியான சாட் ஜி.பி.டி. தகவல் தொழில்நுட்பம் மூலம் கொண்டு சேர்ப்பதற்கு கலந்து ஆலோசித்தார். தமிழ் மொழியானது சிங்கப்பூரில் ஆட்சி மொழியாக உள்ளதால் ,இவ்மையம் தமிழ்நாடு அரசுடன் இணைந்து இந்த தொழில்நுட்பத்தை உருவாக்க இசைவு தெரிவித்துள்ளது. இதற்கான மேல் நடவடிக்கைகள் தமிழ்நாடு முதலமைச்சர்அவர்களுடன் கலந்தாலோசித்து எடுக்கப்படும். இந்நிகழ்வின் போது வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மை செயலாளர் செல்வி அபூர்வா, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் வி.கீதாலட்சுமி மற்றும் பேராசிரியர்களும் கலந்து கொண்டனர்.

சென்னை, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக தலைமை அலுவலகத்தில், நேற்று (29.07.2024) நிதி மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தலைமையில் தமிழ்நாட்டில் தென்மேற்கு பருவமழை காரணமாக, தற்போது நீலகிரி மற்றும் கொடைக்கானல் உள்ளிட்ட மலைப்பகுதிகளில் கனமழை பெய்து வரும் நிலையில், பொது மக்களுக்கு எந்தவிதமான பாதிப்புகளும் ஏற்படாத வண்ணம், பாதுகாப்புடன் கூடிய சீரான மின்சாரம் வழங்குவது தொடர்பாக அனைத்து தலைமைப் பொறியாளர்கள் மற்றும் மேற்பார்வை பொறியாளர்களுடன் காணொலி வாயிலாக ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ராஜேஷ் லக்கானி, இணை மேலாண்மை இயக்குநர் (நிதி) விஷு மஹாஜன், இயக்குநர்/பகிர்மானம் (மு.கூ.பொ) திருமதி மு.இந்திராணி ஆகியோர் கலந்து கொண்டனர். காணொலி காட்சி வாயிலாக அனைத்து மண்டல தலைமைப் பொறியாளர்கள் மற்றும் அனைத்து மின்பகிர்மான வட்ட மேற்பார்வைப் பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

இராமநாதபுரம் மாவட்டம்

பரமக்குடியில் பி.எஸ்.6 ரக 7 புதிய பேருந்துகள்!

அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் துவக்கி வைத்தார்!

இராமநாதபுரம், ஜூலை 30 - இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி பேருந்து நிலையத்தில் 28.07.2024 அன்று தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், காரைக்குடி மண்டலம் மூலம் புதிய பேருந்துகள் துவக்கி வைக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் கதர் கிராமத் தொழில்கள் வாரியத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் தலைமையேற்று BS6 ரக 7 புதிய பேருந்துகளை கொடியசைத்து துவக்கி வைத்தார்.

அப்போது அவர் பேசியதாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சாதி பேதமின்றி உழைக்கும் தலைவராக இருந்து வருகிறார்கள். அது மட்டுமின்றி ஒவ்வொரு துறையிலும் பொதுமக்களுக்கு எந்த வகையில் திட்டங்களை செயல்படுத்த முடியும் என்பதை உணர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் போக்குவரத்துத் துறையின் மூலம் பொதுமக்களின் தேவைக்கேற்ப புதிய வழித்தடங்களையும், பேருந்துகளையும் வழங்கி வருகிறார்கள்.

தற்பொழுது தமிழகத்தில் 7000 புதிய BS6 ரக பேருந்துகள் இயக்கப்படுகிறது. அதனடிப்படையில் இராமநாதபுரம் மாவட்டத்தில் தற்பொழுது பரமக்குடியிலிருந்து 7 புதிய பேருந்துகள் இன்று துவக்கி வைக்கப்படுகிறது. இதே போல் ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிகளிலும் புதிய ரக பேருந்துகள் இயக்கப்பட உள்ளன.

இதே போல் விடியல் பயணம், காலை உணவுத் திட்டம், மகளிர் உரிமைத் தொகை திட்டம், இல்லம் தேடி கல்வி, மக்களைத் தேடி மருத்துவம் என எண்ணற்ற திட்டங்களை வழங்கி, ஒவ்வொரு திட்டத்தையும் மக்களின் தேவை அறிந்து செயல்படுத்துவதில் மற்ற முதலமைச்சர்களை விட நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சிறப்பாக செயல்பட்டு வருவதால், பிற மாநிலங்கள் நம்முடைய முதலமைச்சரின் திட்டங்களை பின்பற்றி வருகிறார்கள் என்றால் மிகை ஆகாது என்றார்.

மேலும் அவர், சாயல்குடி முதல் சிதம்பரம் வரையிலும், இராமநாதபுரம் முதல் இராமேஸ்வரம் வரையிலும், ஏர்வாடி முதல் ஈரோடு வரையிலும், இராமேஸ்வரம் முதல் திருச்சி வரையிலும் (இரண்டு பேருந்துகள்), முதுகுளத்தூரிலிருந்து சிதம்பரம் வரையிலும், சாயல்குடியிலிருந்து திருப்பூர் வரையிலும் என 7 புதிய பேருந்துகளை பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் கதர் கிராமத் தொழில்கள் வாரியத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாநில இளைஞரணி துணைச் செயலாளர் இன்பா ஏ.என்.ரகு, முன்னாள் மாவட்டச் செயலாளர் சுப.த.திவாகர், காரைக்குடி மண்டல தொ.மு.ச. பேரவை செயலாளர் பச்சைமால் மற்றும் பரமக்குடி சார் ஆட்சியர் செல்வி.அபிலாஷா கௌர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் மேலாண் இயக்குநர் மகேந்திரகுமார், பரமக்குடி நகர்மன்றத் தலைவர் சேது கருணாநிதி, காரைக்குடி மண்டல பொது மேலாளர் இளங்கோவன், பரமக்குடி வட்டாட்சியர் சாந்தி மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் பரமக்குடி கிளை தலைவர் அர்ச்சுனன், செயலாளர் மாரிச்சாமி, பொருளாளர் பாண்டி, நிர்வாகிகள் மருதநாகலிங்கம், பாலசிங்கம், நாகநாதன், மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

மாணவர்களை கருத்தியல் வலிமை மிக்கவர்களாக்க

கல்லூரிகளில் “தமிழ் மாணவர் மன்றம்” உருவாக்கம்!

மாணவர் அணி செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

சென்னை, ஜூலை 30- “மாணவர்களிடம் திறன் மேம்பாட்டை வளர்க்க கல்லூரிகளில் “தமிழ் மாணவர் மன்றம்” உருவாக்க முடிவு செய்யப்பட்டு ஆகஸ்டில் பணிகள் தொடங்கப்படுகிறது” என்று கழக மாணவர் அணி செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ. அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்கள் ஆணையின்படி, 2026 ஆம் ஆண்டிற்கான சட்டமன்றத் தேர்தல் ஒருங்கிணைப்புக் குழு அமைக்கப்பட்டு, கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் கடந்த 24.7.2024 அன்று மாணவர் அணியின் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், 2017 முதல் 2024 ஆம் ஆண்டு வரையிலான கழக மாணவர் அணியின் முழு செயல்பாட்டு அறிக்கை வழங்கப்பட்டது.

கழக மாணவர் அணியில் மாவட்டப் பொறுப்பில் உள்ள அனைவரும் கருத்தியல் வலிமை மிக்கவர்களாக, இளைய தலைமுறை மாணவச் சமுதாயத்திடம் திராவிட இயக்கச் சிந்தனைகளை, கொள்கைகளை விதைக்கக் கூடியவர்களாக விளங்கிட வேண்டுமென்பதற்காக கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்கள் ஆணையின்படி, 72 கழக மாவட்டங்களை நான்கு மண்டலங்களாகப் பிரித்து அவற்றில் 2 மண்டலங்களுக்கான கருத்தியல் பயிலரங்கங்கள் நடத்தி முடிக்கப்பட்டது. மேலும் 2 மண்டலங்களில் விரைந்து பயிலரங்கம் நடத்தி முடிக்க கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்.

தமிழ் மொழி, தமிழர் பண்பாடு, தமிழர் கலை மற்றும் தமிழினத் தொன்மைகளையும் பெருமைகளையும் இளைய தலைமுறையினர் அறியும் வண்ணம் செயல்படவும், பகுத்தறிவு, சுயமரியாதை, சமூகநீதி, சமத்துவம் ஆகிய கொள்கைகளை பரப்புரைச் செய்திடவும், மாணவர்களிடம் திறன் மேம்பாட்டினை உருவாக்க பயிற்சிகளை வழங்கவும், கல்லூரி மாணவர்களின் தேவைகளை, பிரச்சினைகளை பூர்த்தி செய்யவும், அரசியல் சார்பற்று இயங்கும் வகையில் “தமிழ் மாணவர் மன்ற”த்தை உருவாக்கும் பணியினை விரைவாக மேற்கொள்ள வேண்டுமென கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்.

மூன்று குழுக்கள்!

கழக மாணவர் அணியின் மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் வரும் ஆகஸ்ட் முதல் வாரத்திலேயே இந்தப்பணிகளைத் தொடங்கவும் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். இதன் அடிப்படையில் 72 கழக மாவட்டங்கள் மாணவர் அணித் தலைவர் இரா.ராஜிவ் காந்தி, இணைச் செயலாளர்கள் சி.ஜெரால்டு மற்றும் எஸ்.மோகன் ஆகியோர் தலைமையில் மூன்று குழுக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

ஆகஸ்டில் பணிகள் துவக்கம்!

மாநில துணை செயலாளர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள மாவட்டத்தின் மாவட்டக் கழக செயலாளர்களுடன் தொடர்பு கொண்டு மேற்கொள்ளப்பட பணிகள் குறித்து அதற்கான செயல்திட்டங்களை தயார் செய்து, விரைவாக மாநில மாணவர் அணி செயலாளரிடமும், குழு தலைமையிடமும் வழங்க வேண்டும். பிறகு விரைவாக மாவட்ட அமைப்பாளர்களை தொடர்பு கொண்டு அந்தந்த மாவட்டத்தில் உள்ள கல்வி நிலையங்களின் விவரங்களை சேகரித்து தமிழ் மாணவர் மன்றத்தில் உறுப்பினர்களை சேர்க்கும் பணியினை துவக்கிட வேண்டும்.

அதற்கான உறுப்பினர் படிவம், உறுப்பினர் அட்டை, அமைப்பை உருவாக்கி நிர்வாகிகளை தேர்வு செய்யும் படிவம் ஆகியவை மாநில மாணவர் அணி துணைச் செயலாளர்களிடம் வழங்கப்பட இருக்கிறது. மாநில துணைச் செயலாளர்கள் வழங்குகின்ற ஆலோசனைப்படி, அந்தந்த மாவட்ட அமைப்பாளர்கள் ஆகஸ்ட் முதல் வாரத்தில் தங்களது பணிகளைத் தொடங்கி ஒரு மாத காலத்திற்குள் நிறைவு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மாநில நிர்வாகிகள் பணியாற்றுவதற்கு ஒதுக்கப்படுகின்ற மாவட்டப் பட்டியல் பின்வருமாறு: -

இரா. ராஜீவ்காந்தி, தலைவர்

பெயர் கழக மாவட்டங்கள்

1. அதலை பி.செந்தில்குமார் - திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி மத்திய, தென்காசி வடக்கு, தென்காசி தெற்கு, தூத்துக்குடி வடக்கு, தூத்துக்குடி தெற்கு, கன்னியாகுமரி கிழக்கு, கன்னியாகுமரி மேற்கு.

2. பி.எம். ஆனந்த் - திருச்சி வடக்கு, திருச்சி தெற்கு, திருச்சி மத்திய, தஞ்சை வடக்கு, தஞ்சை மத்திய, தஞ்சை தெற்கு, மயிலாடுதுறை, நாகை, திருவாரூர்.

3. பூர்ண சங்கீதா சின்னமுத்து - புதுக்கோட்டை வடக்கு, புதுக்கோட்டை தெற்கு, சிவகங்கை, இராமநாதபுரம், விருதுநகர் வடக்கு, விருதுநகர் தெற்கு.

சி. ஜெரால்டு, இணைச் செயலாளர்

1. ரா. தமிழரசன் - காஞ்சிபுரம் வடக்கு, காஞ்சிபுரம் தெற்கு, தருமபுரி கிழக்கு, தருமபுரி மேற்கு, சேலம் கிழக்கு, சேலம் மேற்கு, சேலம் மத்திய, திருவண்ணாமலை வடக்கு, திருவண்ணாமலை தெற்கு.

2. கா. அமுதரசன் - அரியலூர், பெரம்பலூர், கடலூர் கிழக்கு, கடலூர் மேற்கு, விழுப்புரம் வடக்கு, விழுப்புரம் தெற்கு, கள்ளக்குறிச்சி வடக்கு, கள்ளக்குறிச்சி தெற்கு.

3. ஜெ.வீரமணி இராணிப்பேட்டை, வேலூர், திருப்பத்தூர், ஈரோடு வடக்கு, ஈரோடு தெற்கு, கிருஷ்ணகிரி கிழக்கு, கிருஷ்ணகிரி மேற்கு.

எஸ். மோகன், இணைச் செயலாளர்

1. மன்னை த. சோழராஜன் - சென்னை வடக்கு, சென்னை வடகிழக்கு, சென்னை கிழக்கு, சென்னை மேற்கு, சென்னை தென்மேற்கு, சென்னை தெற்கு, திருவள்ளூர் கிழக்கு, திருவள்ளூர் மத்திய, திருவள்ளூர் மேற்கு.

2. கா. பொன்ராஜ் - கரூர், திண்டுக்கல் கிழக்கு, திண்டுக்கல் மேற்கு, தேனி வடக்கு, தேனி தெற்கு, மதுரை வடக்கு, மதுரை தெற்கு, மதுரை மாநகர்.

3. வி.ஜி. கோகுல் - கோவை வடக்கு, கோவை தெற்கு, கோவை மாநகர், திருப்பூர் வடக்கு, திருப்பூர் தெற்கு, நீலகிரி, நாமக்கல் கிழக்கு, நாமக்கல் மேற்கு.

இவ்வாறு சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

நெல்லை சட்டமன்றத் தொகுதியில் நூலகம் திறப்பது குறித்து

நெல்லை மாநகரக் கழக ஆலோசனைக் கூட்டம்!

மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன் ஆலோசனை வழங்கினார்!

நெல்லை, ஜூலை 30- நெல்லை மாநகர தி.மு.க. அலுவலகத்தில் திருநெல்வேலி சட்டமன்றத் தொகுதியில் நூலகம் திறப்பதற்கான ஆலோசனைக் கூட்டம் மத்திய மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வில்சன் மணித்துரை தலைமையில் மாநகர துணைச் செயலாளர் அப்துல் கையூம், நெல்லை பகுதிச் செயலாளர் நமச்சிவாயம், பாளை பகுதி செயலாளர் அன்டன் செல்லதுரை ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன் பங்கேற்று ஆலோசனைகளை வழங்கி பேசினார்.

கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க தமிழ்நாடு முழுவதும் பொதுமக்கள், மாணவர்கள், மாணவியர்கள் பயன் பெறும் வகையில் 234 சட்டமன்றத் தொகுதி முழுவதும் நூலகங்கள் திறக்கப்பட்டு வருகிறது. நெல்லை மாநகரம் பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதியில் நூலகம் திறக்கப்பட்டு சிறப்பாக நடைபெற்றது.

முதல்வர் - கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழிகாட்டுதலின்படி நிதி மற்றும் மனிதவள மேலாண்மைதுறை அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவுறுத்தலின்படி திருநெல்வேலி சட்டமன்றத் தொகுதியில் நூலகம் திறப்பதற்கு நெல்லை மாநகர கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

நிகழ்வில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் மாயா,மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர்கள் அலிஃப் மீரான், இனியன், செல்வம், மாவட்டப் பிரதிநிதி வேங்கை வெங்கடேஷ், மாநகர பிரதிநிதி சிவா, கேபிள் குமரேசன், மாநகர தொழிலாளர் அணி அமைப்பாளர் பெப்சி சரவணன், தலைவர் சங்கர் கணேஷ், மாணவர்கள் சிறுபான்மை அணி சார்லஸ் முத்துராஜ், மாநகர அணி துணை அமைப்பாளர் சண்முகசுந்தர், முருகன், வினோத், சங்கர், மேலப்பாளையம் ஹமீம் முஸ்தபா, கொண்டாநகரம் கார்த்திக் உள்பட கழகத்தினர் கலந்து கொண்டனர்.

மதுரை மாநகர், மாவட்ட தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பாக ரேஸ்கோர்ஸ் மைதானத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினையொட்டி கழக இளைஞரணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி தென் இந்திய அளவிலான மாபெரும் கபடி போட்டி மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி., வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, உணவுத்துறை அமைச்சர் அர.சக்கரபாணி ஆகியோர் போட்டியை துவக்கி வைத்து வெற்றி பெற்ற அணிக்கு பரிசுகள் வழங்கிய நிலையில், நினைவு பரிசாக வீரவாளை தயாநிதி மாறன் எம்.பி.க்கு வழங்கினர். இந்நிகழ்வில் கழக நிர்வாகிகள் பொன்முத்து ராமலிங்கம், வ.வேலுசாமி, பெ.குழந்தைவேலு, விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ரா.முத்துக்குமார், துணை அமைப்பாளர் ராம் பிரசாத் மற்றும் கழக நிர்வாகிகள், துணை அமைப்பாளர்கள், கழகத்தினர் பங்கேற்றனர்.

நெல்லை மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம் அம்பேத்கர் நகரில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலம் தூய்மை பணியாளர்களுக்காக ரூபாய் 53 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் 408 குடியிருப்புகளுக்கான பணிகளை குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் பார்வையிட்டார். உடன் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா. ஆவுடையப்பன், மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.மைதீன்கான், குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அரசு செயலாளர் அர்ச்சனா பட்நாயக், தொழில் ஆணையர் நிர்மல் ராஜ், மேலாண்மை இயக்குனர் பிரபாகரன், மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன், அப்துல்வகாப் எம்.எல்.ஏ., ரூபி மனோகரன் எம்.எல்.ஏ., விஜிலா சத்யானந்த், ஆவின் ஆறுமுகம், போர்வெல் கணேசன், கிரிஜா குமார், கருப்பசாமி கோட்டையப்பன், மீரான் மைதீன் உள்பட அரசு அலுவலகங்கள், கழகத்தினர் மற்றும் பலர் உள்ளனர்.